**செ.வெ.எண்: 77** **நாள்: 28.01.2017**

# <u>பத்திரிகைச்செய்தி</u>

"தரிசுநிலத்தின் தங்கம்" என்று அழைக்கப்படும் முந்திரி தற்போது பரவலாக துளிர்இலைகள் தோன்றும் நிலையிலுள்ளது. துளிர் இலைகளை தேயிலைக் கொசுதாக்கும் அபாயம் உள்ளது. இந்த தேயிலைக் கொசுவானது முந்திரி இலைகளின் சாறினை உறிஞ்சி குடித்து விடுவதால் இலைகள் கருகி, தீயினால் கருகியது போன்று காணப்படும். இதன் பாதிப்பினால் பூக்கள் வருவது தடைப்படும். ஏனென்றால் முந்திரி பூக்கள் புது துளிரில் தான் பூக்க ஆரம்பிக்கும். எனவே முந்திரி இலைகளை தேயிலை கொசுவினில் இருந்து காப்பாற்றலாம். டாசைக்குளோத்ரின் 2.5EC (Lambdacyhalothrin) என்ற மருந்தினை 1மில்லி என்ற அளவிலும் அதனுடன் வெட்டபிள் சல்பர் 3 கிராம் மருந்தினையும் சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்த கலவையினை அதிகாலை வேளையில் மரங்களின் இலைகள் நன்கு நனையும்படி ராக்கர் ஸ்பிரேயர் கொண்டு தெளிக்குமாறு புதுக்கோட்டை தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.சே.அருணாச்சலம் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**